**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை.**

**முன்னிலை: திருமதி.S.ரேவதி., பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருவாடானை.**

**2026–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 03–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A. No.866 of 2024**
**in**
**O.S.No.99 of 2018**

1. இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், ஆதியூர் அஞ்சல், ஆதியூர் கிராமத்திலிருக்கும் முத்தப்புடையார் அவர்களின் குமாரர், இந்து, விவசாயம், சுமார் 90 வயதுள்ள நல்லப்புடையார் (மரணம்)

2. இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், ஆதியூர் அஞ்சல், ஆதியூர் கிராமத்திலிருக்கும் நல்லப்புடையார் அவர்களின் குமாரர், இந்து, விவசாயம், சுமார் 64 வயதுள்ள பால்ராஜ்.

3. இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், ஆதியூர் அஞ்சல், ஆதியூர் கிராமத்திலிருக்கும் பால்ராஜ் அவர்களின் குமாரர், இந்து, விவசாயம், சுமார் 38 வயதுள்ள பாரதிராஜா.

4. இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், ஆதியூர் அஞ்சல், ஆதியூர் கிராமத்திலிருக்கும் முத்தையா அவர்களின் மனைவி, இந்து, வீட்டுக்குடித்தனம், சுமார் 60 வயதுள்ள காந்திமதி.

... மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், ஆதியூர் அஞ்சல், ஆதியூர் கிராமத்திலிருக்கும் சேவுகப்பெருமாள் அவர்களின் குமாரர், இந்து, விவசாயம், சுமார் 67 வயதுள்ள சேவுகப்பெருமாள்.

.... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

அ.வ.எண்.99/2018, அ.வ.எண்.02/2019 வழக்கையும் ஒருசேர இணைத்து ஜாயின்ட் டிரையலாக நடத்த உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 09.12.2024.

REVATHI SUBBIAH    Digitally signed by REVATHI SUBBIAH

இந்த மனுவானது இந்நீதிமன்றம் முன்பு 22.06.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.பாலாஜி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.U.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவாணை

1. இம்மனு பரிகாரம் மாற்றியமைத்து மனு அனுமதிக்கப்படுகிறது.

2. அ.வ.எண்.02/2019 மற்றும் அ.வ.எண்.99/2018 ஆகிய வழக்குகளை ஒரே நேரத்தில் விசாரணை செய்ய (simultaneous trial) அனுமதி வழங்கப்படுகிறது.

3. செலவுத்தொகை இல்லை.

## சொத்து விபரம்

இல்லை.

2026–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 03–ஆம் நாளான இன்று எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாடானை.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
திருவாடானை

**I.A. No. 866 of 2024**

**in**

**O.S. No.99 of 2018**

உத்தரவாணை

நாள்: 03.07.2026.